புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635
T/PN/2025/1216/7215/1419


# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 174 | 29-12-2025 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 174 | 29-12-2025 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy


## புதுச்சேரி வருகைதரும் குடியரசு துணைத் தலைவர்: மூன்றடுக்கு போலீஸ் பாதுகாப்பு!



புதுச்சேரி: டிச. 29–

புதுச்சேரியில் நாளை முக்கிய நிகழ்வுகளில் குடியரசு துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார். இதற்காக மூன்று அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

டெல்லியில் இருந்து நாளை காலை 5.30 மணிக்கு தனி விமானத்தில் குடியரசு துணைத் தலைவர் புறப்படுகிறார். காலை 10 மணிக்கு புதுவை விமான நிலையத்துக்கு வருகிறார். அவரை விமான நிலையத்தில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்எல்ஏக் கள், அரசு அதிகாரிகள் வரவேற்கின்றனர்.

விமான நிலையத்தில் போலீஸாரின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்படுகிறது. பின்னர் அங்கிருந்து கார் மூலம் புதுவை கம்பன் கலையரங்கத்துக்கு 10.20 மணிக்கு வருகிறார். அங்கு நடைபெறும் அரசு விழாவில், குமரகுரு பள்ளத்தில் ஸ்மார்ட்டி சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளை திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து 11.20 மணிக்கு பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து பாரதியின் நினைவு இல்லத்தை பார்வையிடுகிறார். தொடர்ந்து 11.50 மணிக்கு குமரகுரு பள்ளத்தில் திறக்கப்பட்ட குடியிருப்பு களை அவர் பார்வை யிட்டு, பயனாளி களுடன் கலந்துரையாடுகிறார்.

அங்கிருந்து 12.20 மணிக்கு மூலக்குளத்தில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெறும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார். பின்னர் மதியம் ஒரு மணிக்கு ராஜீவ்காந்தி சதுக்கத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் அவர் சாப்பிட்டு, சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார்.

பின்னர் மதியம் 3 மணிக்கு காலாப்பட்டில் உள்ள மத்திய பல் கலைக்கழகம் செல்கிறார். அங்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவர் களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

மேலும் சர்வதேச மாநாடு மையத்தை திறந்து வைத்து, 100 அடி உயர கொடி கம்பத்தில் தேசியக்கொடி ஏற்றுகிறார்.

தொடர்ந்து 4 மணிக்கு புதுவை விமான நிலையத்துக்கு வந்து திருச்சிக்கு புறப்பட்டு செல்கிறார். குடியரசு துணைத்தலைவர் வருகையையொட்டி புதுவையில் 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் விடுமுறையை ஒட்டி ஏற்கெனவே சுற்றுலா பயணிகள் அதிகளவில் குவிந்துள்ளனர். இதனால் போலீஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தி விடுதிகளில் யார் தங்கியுள்ளார்கள் என கண்காணித்து வருகின்றனர். மாநில எல்லைகளிலும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குடியரசு துணைத் தலைவர் வந்து செல்லும் பகுதிகளில் குறிப்பாக லாஸ்பேட்டை விமான நிலையம் முதல் கிழக்கு கடற்கரை சாலை, காலாப்பட்டு பல்கலைக் கழக சாலை சீரமைக்கப் படுகிறது. நகர பகுதியில் உள்ள சாலைகளும் சீரமைக்கப்படுகிறது. குடியரசு துணைத்தலைவர் செல்லும் சாலைகளின் இருபுறமும் தடுப்புகள் அமைக்கப்பட் டுள்ளது.

குடியரசு துணைத் தலைவர் பாதுகாப்பு, போக்குவரத்து சீரமைப்பு பணியில் ஆயிரத்து 500 போலீஸார் ஈடுபடுத்தப் பட உள்ளனர். அதோடு 4 கம்பெனி துணை ராணுவ பாதுகாப்பு படையும் புதுவையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. புதுவையில் டிரோன்கள் பறக்கவிட தடை விதிக்கப் பட்டுள்ளது.

குடியரசு துணைத் தலைவர் வருகையையொட்டி போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவரது வாகனம் செல்லும் நேரத்தில் அந்தந்த சாலைகளில் எந்த வாகனங்களும் அனுமதிக்கப்படாது.

## தமிழ் உலகின் பழமையான மொழி; தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது'' : பிரதமர் மோடி!



புதுடெல்லி: டிச.29–

"தமிழ்மொழி உலகின் மிகவும் பழமையான மொழி. தமிழ் இலக்கியம் மிகவும் வளமானது. நேற்று தேசத்தின் பிற பாகங்களிலும் கூட குழந்தைகள் இளைஞர்கள் மத்தியில் தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது" என மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

மனதின் குரல் நிகழ்ச்சியின் 129 வது அத்தியாயத்தில் நேற்று (டிச.28) பிரதமர் மோடி ஆற்றிய உரையில், "2025 ன் பல கணங்கள் நமக்குப் பெருமிதத்தைச் சேர்த்தன. இந்த ஆண்டு ஆபரேஷன் சிந்தூர், அனைத்து இந்தியர் களுக்கும் பெருமையின் அடையாளமானது.

2025ம் ஆண்டு விளையாட்டுத் துறையில், நமது ஆடவர் கிரிக்கெட் அணியானது ஐசிசி சேம்பியன்ஸ் கோப்பையை வெற்றி பெற்றார்கள். பெண்கள் கிரிக்கெட் அணியும் கூட, முதன்முறையாக உலகக் கோப்பையை வென்றெடுத்தார்கள். பார்வைத்திறனில்லா மாற்றுத் திறனாளிப் பெண்களுக்கான டி20 உலகக் கோப்பையை வென்று வரலாறு படைத்தார்கள்.

விஞ்ஞானம் மற்றும் விண்வெளித் துறை களிலும் கூட இந்தியா மிகப்பெரிய எல்லையைத் தாண்டியிருக்கிறது. சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையம் வரை சென்ற முதல் இந்தியர் ஆனார்.

மிகுந்த நம்பிக்கையோடு உலகம் இன்று இந்தியாவை உற்று கவனிக்கிறது. இந்தியாவின் மீது உலகு வைத்திருக்கும் நம்பிக் கையின் மிகப்பெரிய காரணம் நமது இளைஞர்கள் சக்தியே. விஞ்ஞானத் துறையில் நமது சாதனைகள், புதிய புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பத்தின் பரவல் ஆகியவை அனைத்தும் உலக நாடுகளை மிகவும் கவர்ந்திருக்கின்றன.

கடந்த மாதம் ஃபிஜியில் ஒரு பள்ளிக்கூடத்தில் முதன்முறையாக தமிழ் தினம் கொண்டாடப் பட்டது. அன்றைய தினத்தன்று குழந்தை களுக்குக் கிடைத்த மேடையில் அவர்கள் தங்களுடைய மொழியின் பெருமை குறித்து தங்கு தடையின்று உரையாற்றினார்கள்.

குழந்தைகள் தமிழில் கவிதைகளை உரைத் தார்கள், சொற்பொழிவு ஆற்றினார்கள், தங் களுடைய கலாச் சாரத்தை, மெத்த தன்னம்பிக்கையோடு மேடையில் வெளிப்படுத் தினார்கள்.

தமிழ்மொழி உலகின் மிகவும் பழமையான மொழி. தமிழ் இலக்கியம் மிகவும் வளமானது. இன்று தேசத்தின் பிற பாகங்களிலும் கூட குழந்தைகள் இளைஞர்கள் மத்தியில் தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது. இதுதான் மொழியின் பலம், இதுவே தேசத்தின் ஒற்றுமை.

2025ல் மனதின் குரலின் கடைசிப் பகுதி இது, நாம் 2026ம் ஆண்டில், இதே உற் சாகம் பேரூக்கத்தோடு, உள்ளார்ந்த உணர்வோடு நமது மனதின் குரலில் கண்டிப்பாக ஈடுபடு வோம். வளர்ச்சியடைந்த இந்தியா என்ற நமது உறுதிப்பாடு கண்டிப் பாக மெய்யாகும். இந்த நம்பிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் பலமடைந்து வருகிறது. 2026ஆம் ஆண்டு, இந்த உறுதிப்பாடு மெய்யாகும் பயணத்தில் ஒரு முக்கியமான கட்டமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

## நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் 13 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர்!: முதல்வர் மு.க.ஸ்டாலின்''

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,உங்களைத் தேடி, உங்கள் பகுதிகளுக்கே வந்து உங்களின் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களின் மூலம் நேற்று வரை மட்டும் 13 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர்! #FullBody HealthCheckUps, சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனைகள் போன்றவையால்



தொடக்க நிலையிலேயே பல இலட்சம் மக்களின் பிரச்சனைகள் கண்டறியப்பட்டு, உரிய உயர்தரச் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டு அவர்களின் உயிர் காத்துள்ளோம்! முகாம்களிலேயே முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைத்து மக்களின் துயர் துடைத்துள்ளோம்.

நலம் பெற்றோரின் குடும்பத்தினர் கூறும் நன்றிகளோடு தொடர்கிறது நலம் காக்கும் ஸ்டாலின்!இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.",



அமைச்சர் முத்துசாமி சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரத்தில் உள்ள மாவீரன் பொல்லான் அரங்கத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.உடன் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர். செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுசரி, தூய்மை பணியாளர் நலவாரிய துறை தலைவர் கனிமொழி, ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, செய்திமக்கள் தொடர்பு அலுவலர் சுகுமார், அறச்சலூர் பேரூராட்சி தலைவர் விஜயகுமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் சுகுமார், அறச்சலூர் பேரூராட்சி தலைவர் விஜயகுமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் சுகுமார், அறச்சலூர் பேரூராட்சி தலைவர் விஜயகுமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் கலைமாமணி உட்பட பலர் உள்ளனர்.

## ஈரோடு அரசு தலைமை மருத்துவ மனையின் ஆண்டு இறுதி அறிக்கை...

## ரத்தப் பரிசோதனையில் 41 பேருக்கு எச் ஐ வி தொற்று இருப்பதாக அதிர்ச்சி கண்டுபிடிப்பு...



ஈரோடு. டிச. 29

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் ஆண்டு ரத்தப் பரிசோதனை அறிக்கையில் 41 பேருக்கு எச்ஐவி தொற்று இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இது ஈரோடு மாவட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை ஈரோட்டில் மையப் பகுதியான எம் ஜி ஆர் சிலை ரவுண்டானா அருகே அமைந்துள்ளது.

இந்த ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை ஒட்டி ஈரோட்டில் பிரதான சாலைகளாக விளங்கும், பிரபு சாலை, மேட்டூர் ரோடு, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, பெருந்துறை கோவை ரோடு என முக்கிய சாலைகளின் சந்திப்பில் இந்த அரசு தலைமை மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை ஏற்கனவே பெரிய அளவிலான கட்டிடத்தில் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது புதிய அதிநவீன உயர் சிறப்பு மருத்துவ மனையாக மாற்றப்பட்டு, அதற்கென்று பிரம்மாண்டமான புதிய கட்டிடம் கட்டப்பட்டு சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த புதிய கட்டிடம் திறக்கப்பட்டது.

இந்த புதிய கட்டிடத்தில் செயல்படும் அதிநவீன வசதிகளுடன் கூடிய உயர்தர சிகிச்சை பெறும் வகையில் அமைக்கப்பட்ட அதிநவீன சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மாற்றப்பட்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பழைய மற்றும் புதிய கட்டிடங்களில் அனைத்து வகையான நோய்களுக்கும், இங்கு வரும் மருத்துவ பயனாளிகள் சிகிச்சை மேற்கொண்டு செல்கின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளை சேர்ந்த மருத்துவ பயனாளிகள் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்து இலவசமாக பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளை எடுத்து, சிகிச்சை முடிந்து உடல் நலம் தேறி தங்களின் வீடுகளுக்கு செல்கின்றனர். இவ்வாறு சிறப்புமிக்க சிகிச்சைகள் வழங்கப்படும் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை மற்றும் அதி நவீன சிறப்பு உயர்தர சூப்பர் ஸ்பெஷாலிட்டி சிகிச்சைகள் வழங்கும் இந்த அரசு தலைமை மருத்துவமனையில் 2025 ஆம் ஆண்டுக்கான ரத்தப் பரிசோதனை அறிக்கையின் முடிவுகள் வெளியிடப்பட் டுள்ளது.

அவ்வாறு வெளியிடப்பட்ட ரத்த பரிசோதனை ஆண்டு அறிக்கையில் 41 நபர்களுக்கு எச்ஐவி என்று சொல்லப்படும், கொடிய நோயாக கருதப்படும் எய்ட்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்ஐவி தொற்று 41 நபர்களுக்கு இருப்பது ரத்தப் பரிசோதனை ஆண் அறிக்கை யில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ஈரோடு மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த எச்ஐவி தொற்று உள்ள மருத்துவ பயனாளிகளுக்கு பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்கள் தவறுதலாக மற்ற மருத்துவ பயனாளிகளுக்கு பயன்படுத்தப்பட்டால் அவர்களுக்கும் இந்த எச்ஐவி தொற்று வர வாய்ப்புள்ளதாக தெரிகிறது. இதன் காரணமாக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எச்ஐவி தொற்று அல்லாத மருத்துவ பயனாளிகளும் அச்சமடைந்து உள்ளனர்.

ஈரோடு மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குனராகம், எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு பிரிவை கண்காணித்து, எச்ஐவி நோய் குறித்த விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில், எய்ட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவை முழு அளவில் கவனமாக செயல்பட அறிவுறுத்த வேண்டும் மேலும் நோய்களின் தன்மை குறித்து, ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் ஈரோடு மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குனராகம் மற்றும் ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை நிர்வாகம் ஆகியவை இணைந்து நோய்களின் தன்மை குறித்து பொதுமக்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் பொதுமக்கள் மத்தியில் அவைகள் சென்று சேரும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈரோடு மாவட்ட மக்கள் அரசுக்கு வேண்டுகோள் வைத்துள்ளனர். எச் ஐ வி நோய், காசநோய் உள்ளிட்ட தொற்று நோய்களை கட்டுப்படுத்த உடனடியாக வீரியமிக்க ஒரு நடவடிக்கையை ஈரோடு மாவட்ட மருத்துவ பணிகள் துறை மேற்கொள்ள வேண்டும் என நாமும் கோரிக்கை முன்வைப்போம். மக்கள் நலனில் அக்கறையோடும் அவர்களின் உடல் நல பாதுகாப்பில் கவனத்தோடும் இருக்க வேண்டும் என ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை நிர்வாகத்திற்கு வேண்டுகோள் வைக்கப்படுகிறது.



வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், டி.டி மோட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி தொடங்கி வைத்து முகாமை பார்வையிட்டார். இம்முகாமில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் சுபலட்சுமி, பேரணாம்பட்டு ஒன்றியக்குழுத்தலைவர் சித்ரா ஜனார்தனன், துணைத் தலைவர் லலிதா டேவிட், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பரணிதரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர்

## தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் (குலாலர்) மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கல்விப் பரிசளிப்பு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



டிசம்பர் 29

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் (குலாலர்) மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் சங்கத்தின் சார்பாக 9 ஆம் ஆண்டு கல்வி பரிசளிப்பு – நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா லட்சுமி நகரில் உள்ள குலாலர் கல்யாண மண்டபத்தில் தலைவர் ஜெயராமன். செயலாளர் கன்னிமுத்து. பொருளாளர் பால சுப்பிரமணியம் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாநில தலைவர் டாக்டர்சேமநாராயணன் சிறப்புரையாற்றி செய்தியாளர்களை சந்தித்தார் அதில் பேசிய அவர் மண்பாண்டம் செய்யும் எங்களுக்கு பருவ மழை பெய்கின்ற காலகட்டத்தில் தமிழக அரசு தலா ரூ.5,000 வழங்கி வருகிறது அதனை 10.000 ரூபாயாக மாற்றி தர வேண்டும் எனவும் தொழிலாளர்கள் மின்சாரத்தில் இயக்கக்கூடிய சீலாவீல் மின்சக்கர இலவசமாக வழங்க வேண்டும் எனவும் பல்லாண்டு காலமாக வசித்து வருகின்ற தங்களுக்கு அடிமனை பட்டா வழங்க வேண்டும் மேலும்

களிமண் எடுப்பதற்கு அரசு இலவசமாக வழங்க வேண்டும் எனவும் மேலும் மின்சாரம் சலுகை வேண்டும் எனவும் மூன்று சதவிகித இட ஒதுக்கீடு தமிழக அரசு வழங்க வேண்டும் எனவும் மேலும் தங்கள் சமூகத்தினருக்கு தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றி யார் தருவார்களோ அவர்களுடன் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி மற்றும் ஜனவரி மாதம் சென்னை அருகே ஒரு லட்சம் பேர் பங்கேற்கும் மாபெரும் மாநாடு நடைபெற இருப்பதாக தெரிவித்தார் மேலும் பொதுமக்கள் சமைக்கும் உணவை மண்பாண்டத்தில் சமைத்து சாப்பிட்டால் அவர்களுக்கு ஆயுள் கூடும் மேலும் அவர்களுக்கு எந்த ஒரு நோய் நொடியும் வராது எனவும் பொதுமக்கள் அனைவரும் சமைக்கும் போது மண்பாண்டத்தினை உபயோகிக்க வேண்டுமென டாக்டர் சேம நாராயணன் கேட்டுக்கொண்டார் இந்த நிகழ்வில் மாநில துணைத்தலைவர் பாலசுப்ரமணியம். மாநில இணைச் செயலாளர் நாகராஜ். மாநில இளைஞரணி அமைப்பாளர் செந்தில்குமார். உள்ளிட்ட நிர்வாகிகள் 200க்கும் மேற்பட்டோர் பெரும் திரளாக பங்கேற்றனர் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது....

## திருச்சி ,பாலக்கரையில் புகையிலை விற்றவர் கைது

திருச்சி, டிச. 29:

திருச்சி ,பாலக்கரை பகுதியில் புகையிலை விற்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பெயரில் நேற்று போலீசார் சோதனை மேற் கொண்டனர். அப்போது காஜா பேட்டை அரசமரத்தடி அருகே புகையிலை விற்ற சங்கிலியாண்டபுரம் அண்ணா நகரை சேர்ந்த மாரியப்பன் (வயது32) என்பவர்ரை போலீசார் கைது செய்து, அவரிடம் இருந்த 80 கிராம் புகையிலையை பறிமுதல் செய்தனர் பின்னர் ஜாமினில் விடுவித்தனர்.



வேலூர் மாவட்டம் செங்காநத்தம் மலை கிராமத்தில் கணவர் இன்றி இரண்டு குழந்தைகளுடன் ஒரு சிறிய அறையில் மின்சாரம் வசதி இல்லாமல் வறுமையில் தவிர்த்து வருகிறார் . திருமதி உஷா. தினமும் 300 ரூபாய் கூலிக்காக ஓட்டலில் வேலை செய்கிறார் அரசு பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவி தினமும் டார்ச் லைட் வெளிச்சத்தில் படித்து வருகிறார் இவர்களுக்கு நேரடியாக சென்று கல்வி உபகரணங்களை வழங்கினேன் இந்த இரண்டு குழந்தைகளும் தினமும் சுமார் 8 கிலோமீட்டர் அவரை பள்ளிக்கு நடந்து சென்று வருகின்றன . அரசு இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை வைக்கின்றேன்.

## வேலூரில் டிச 30 விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

வேலூர் டிச.29

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வரும் டிச 30ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைத் தீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை,கால்நடை பராமரிப்புத்துறை, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவுத்துறை, நீர்வள ஆதார அமைப்பு, வனத்துறை, மாசுக்கட்டுப்பாடு வாரியம். மின்சாரத்துறை, போக்குவரத்துத்துறை, பால்வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயி பிரதிநிதிகள் தெரிவிக்கும் குறைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர்.

எனவே வேலூர் மாவட்டத்தை சார்ந்த விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று பொது பிரச்சினை களை கோரிக்கை வாயிலாகவும், தனிநபர் பிரச்சினைகளை மனுக் கள் வாயிலாக தெரிவிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

## கோவையில் சர்வதேச ஆக்கி மைதானம்: உதயநிதி ஸ்டாலின் நாளை திறந்து வைக்கிறார்

“கோவை, டிச.29–

கோவை ஆர்.எஸ்.புரத்தில் மாநகராட்சி சார்பில் ரூ.9.67 கோடியில் ஆக்கி மைதானம் கட்டப்பட்டுள்ளது. 6,500 சதுர மீட்டர் பரப்பளவில், சர்வதேச தரத்தில் இந்த ஆக்கி மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. ஆக்கி மைதானத்தை சுற்றிலும் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. இரவிலும் ஆக்கி போட்டிகள் நடத்த வசதியாக 6 மின்கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு மின்கோபுர விளக்கிலும் 500 வாட்ஸ் திறன் கொண்ட 20 எல்.இ.டி. விளக்குகள் பொருத்தப்பட்டு உள்ளன. இதுதவிர மைதான வளாகத்தில் வீரர்கள், வீராங்கனைகளுக்கான உடை மாற்றும் அறை, ஓய்வறை, கழிப்பறை ஆகிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஆக்கி மைதானத்துக்கு தேவையான தண்ணீர் வழங்குவதற்காக தொட்டியும் கட்டப்பட்டு உள்ளது. இந்த ஆக்கி மைதானத்தை துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நாளை (30ந் தேதி) திறந்து வைக்கிறார். திறப்பு விழாவுக்கு பின்னர் உதயநிதி ஸ்டாலின் சிறிதுநேரம் அங்கு ஆக்கி விளையாடுகிறார். அதனைத்தொடர்ந்து அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் மொத்தம் 10 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உதயநிதி ஸ்டாலின் பேசுகிறார். திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.”,

## “6ந் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் : ஜாக்டோஜியோ அறிவிப்பு”,


“சென்னை, டிச.29–

தமிழக முதல்அமைச்சரின் தேர்தல் கால வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும், காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், ஆசிரியர் தகுதித்தேர்வை ரத்து செய்ய வேண்டும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றுவோருக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 6ந்தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட போவதாக அறிவித்துள்ளனர். இந்தநிலையில், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு பணியாளர்கள் முழுமையாக பங்கேற்கும் வகையில் ஜாக்டோஜியோ வேலை நிறுத்த ஆயத்த மாநாடு மதுரை பைபாஸ் ரோடு பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடந்தது. இந்த மாநாட்டிற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சந்திரபோஸ்,பாண்டி,நவநீதகிருஷ்ணன்,பொற்செல்வன், பீட்டர் ஆரோக்யராஜ், தமிழ் உள்ளிட்டோர் தலைமை தாங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் நீதிராஜா தொடக்கவுரை நிகழ்த்தினார். முன்னதாக, ஜாக்டோஜியோ உயர்மட்டக்குழு உறுப்பினர் செந்தாமரை கண்ணன், தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் மண்டல பொறுப்பாளர் கிறிஸ்டல் ஜீவா, மாநில ஒருங்கிணைப்பாளர் மயில் உள்ளிட்டவர்கள் பேசினர். மாநாட்டில், ஜனவரி மாதம் நடைபெறும், காலவரையற்ற வேலை நிறுத்தத்தில், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள் அனைவரும் கருப்பு அட்டை அணிந்து முழுமையாக பங்கேற்க வேண்டும் என மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.”,

## திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற இளைஞர்கள் இருவர் முன்னே சென்ற வாகனத்தில் நிலை தடுமாறி மோதியதில் சம்பவ இடத்திலே பலி:

திருச்சி டிச 29

திருச்சி மாவட்டம் , வளநாடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருச்சி மதுரை தேசிய நெடுஞ்சாலை, சொறியம்பட்டி விளக்கு அருகே திருச்சியிலிருந்து மதுரை நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்ற மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் முகமதியா புரத்தை சேர்ந்த மீரா மைதீன் மகன் காதர் மைதீன் (23), மேலூரில் கறிக்கடையில் வேலை பார்த்து வந்ததாகவும், மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வ. உ . சி . நகரைச் சேர்ந்த காதர் மகன் அப்சர் (20) , ஆகியோர் இருசக்கர வாகனத்தில் சென்ற போது நிலை தடுமாறி முன்னே சென்ற வாகனத்தின் மோதியதில் கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத் திலே உயிரிழந்தனர்.



மேலும் தகவல் அறிந்து வந்த வளநாடு போலீசார் இருவரின் உடலை மீட்டு வழக்கு பதிந்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அறிவித்த வரும் 2026 ஆம் ஆண்டிற்கான திருச்சி , தெற்கு மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்காக அக்கட்சியை சார்ந்தவர்கள் விருப்பமான அளித்தனர்:




திருச்சி டிச 29

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அறிவித்த வரும் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான விருப்ப மனுவை திருச்சி தெற்கு மாவட்டம் ,மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கான விருப்ப மானுவை கட்சியின் அலுவலகம் சத்தியமூர்த்தி பவன் சென்னையில் விருப்ப மனுவை தாக்கல் செய்தனர். இந்நிகழ்வில் மாநில செயலாளர் ஜி. ரமேஷ் குமார், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம் முன்னாள் துணை பெருந்தலைவர் ஸ்ரீ வித்யா ரமேஷ் குமார், இளைஞர் காங்கிரஸ் பாராளுமன்ற செயலாளர் கணேசன் , இளைஞர் காங்கிரஸ் சட்டமன்ற செயலாளர் கோபி,இளைஞர் காங்கிரஸ் பண்ணப்பட்டி சரவணன் ,மருங்காபுரி வட்டாரத்தலைவர் தமிழரசன்,இளைஞர் காங்கிரஸ் மாவட்ட துணை தலைவர் தினேஷ் பாபு , வையம்பட்டி இளைஞர் காங்கிரஸ் ரமேஷ் குமார் மற்றும் அக்கட்சியை சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.





வேலூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்பாடி மேற்கு ஒன்றியம் மெட்டுக்குளம் ஊராட்சி பாகம் எண் 106ல் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை காட்பாடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் திரு.எஸ்.தணிகாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.D.M.கதிர் ஆனந்த் MP அவர்கள் பங்கேற்று கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளையும், அரசின் சாதனைகளையும் எடுத்துரைத்து உரையாற்றினார். உடன் கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள், மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்துக்கொண்டனர்.

## மணப்பாறை அருகே வனப்பகுதியில் இரண்டு சிறியரக ராக்கெட் குண்டுகள் கண்டுபிடிப்பு. ராணுவத்தினரின் பயிற்சியின்போது தவறிய குண்டுகளை பொதுமக்கள் கண்டுபிடித்தனர்.



திருச்சி. டிச. 29–

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே வீரப்பூரில் உள்ள வீரமலையில் இந்திய ராணுவத்தினர் குண்டு சுடும் பயிற்சியில் ஈடுபடுவது வழக்கம். வீரமலையின் ஒருபுறம் பயிற்சி நடைபெறும் நிலையில் அதன் பின்புறப் பகுதியான கரூர் மாவட்டம்,தோகை மலை அருகே உள்ள நாகனூர் வனப்பகுதிக் குட்பட்ட வீரமலையை ஒட்டியுள்ள வனப்பகுதி யில் கால்நடைகளை மேச்சலுக்கு ஓட்டிச் சென்ற பொதுமக்கள் சிறிய ரக ராக்கெட் லான்சர் குண்டுகள் கிடப்பதைப்பார்த்து தோகைமலை காவல்துறைக்கு தகவல் அளித்துள்ளனர். அதில் ஒரு குண்டு பாறைக்கு அடியிலும், மற்றொன்று மரத்தடியில் மண்ணில் புதைந்த நிலையிலும் வெவ்வேறு இடங்களில் கிடந்துள்ளது. இரண்டு குண்டுகளும் மண்ணில் புதைந்திருந்த நிலையில் மழையால் மண் அரிப்பு ஏற்பட்டதால் குண்டுகள் தற்போது வெளியே தெரிந்துள்ளது. இவைகள் பல ஆண்டுகளுக்கு முன் பயிற்சியின்போது பயன்படுத்தப்பட்ட பழைய குண்டுகள் எனவும் கண்டுபிடிக்கப் பட்ட குண்டுகள் ராணுவத்தினரின் பயிற்சியின்போது தவறி மலையைத் தாண்டி வந்து விழுந்துள்ளதும் இரண்டும் வெடிக்காத குண்டுகள் எனவும் தெரிய வந்துள்ளது. சம்பவ இடத்தில் மணப் பாறை வட்டாட்சியர் சுந்தர பாண்டியன், வனத்துறையினர், மணப்பாறை மற்றும் தோகைமலை காவல்துறையினர், வனத்துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். சம்பவ இடம் வையம்பட்டி காவல் எல்லைக்குட்பட்ட பகுதி என்பதால் வனத்துறை யினர் இதுகுறித்து வையம்பட்டி போலீசில் புகார் செய்தனர். இதனை அடுத்து திருச்சியிலிருந்து வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு குண்டுகள் சம்பவ இடத்திலிருந்து மீட்டு அதனை செயலிழப்பு செய்யப்படும் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# சேலம் மாநாட்டில் சின்னத்தை அறிமுகப்படுத்துகிறாரா? விஜய்.
# தவெக தேர்தல் சின்னம் மோதிரமா, விசிலா?

சேலம். டிச. 29–

2026 தமிழகச் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தனது தேர்தல் பணிகளையும் கட்சி கட்டமைப்பையும் மிக வேகமாகத் தீவிரப்படுத்தி வருகிறது.

திமுக, அதிமுகவிற்கு இணையான பலமான கட்டமைப்பு:

நிர்வாக ரீதியாகத் தவெக மேற்கொண்டுள்ள மாற்றங்கள் அரசியல் வட்டாரத்தில் வியப்பை ஏற்படுத்தியுள்ளன:

கட்சியை 128 மாவட்டங்களாகப் பிரித்து மாவட்டச் செயலாளர்களை நியமித்துச் செயல்படுத்தி வருகிறது.

வார்டு மற்றும் பகுதி அளவிலும் செயலாளர்கள் நியமிக்கப்பட்டு, அடிமட்ட அளவில் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் 'மின்னல் வேகத்தில்' தேர்தல் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்; இது திமுக, அதிமுக விற்கு இணையான கட்டமைப்பாகப் பார்க்கப்படுகிறது.

தேர்தல் சின்னம் ஒதுக்கீடு?

தவெக சார்பில் தேர்தல் சின்னத்திற்காகச் சில விருப்பங்கள் கடந்த நவம்பர் இறுதியில் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன:

விசில், மோதிரம், மைக், உலக உருண்டை போன்ற சின்னங்கள் முன்னுரிமை அடிப்படையில் கோரப்பட்டன.

தற்போது இந்தியத் தேர்தல் ஆணையம் தவெகவிற்கு ஒரு சின்னத்தை ஒதுக்கிவிட்டதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. அது 'மோதிரமா' அல்லது 'விசிலா' என்பது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் சில நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சேலம் மக்கள் சந்திப்பு:

ஈரோடு பயணத்தைத் தொடர்ந்து, விஜய் தனது அடுத்தகட்டப் பிரச்சாரத்தைச் சேலத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியிலேயே தனது கட்சிச் சின்னத்தை விஜய் முறைப்படி அறிமுகம் செய்வார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# டிச.31ல் இபிஎஸ் தலைமையில் அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்

சென்னை: டிச.29–

டிச.31ம் தேதி எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக எம்ஜிஆர் மாளிகையில், 31.12.2025 காலை 10 மணிக்கு, மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 2026ல் நடைபெறவுள்ளது. ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே 'மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி அதிமுக சார்பில் முதற்கட்ட தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி நடத்தி வருகிறார். இந்நிலையில், தேர்தல் கூட்டணிகளை முடிவு செய்யும் பணியிலும் அதிமுக ஈடுபட்டுவருகிறது. பாஜக தமிழக மேலிட பொறுப்பாளர் பியூஷ் கோயல் அண்மையில் எடப்பாடியை சந்தித்துச் சென்றது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் வரும் 31ம் தேதி அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் தேர்தல் தொடர்பாக பிரதானமாக ஆலோசனைகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சேலத்தில் நடக்கும் பொதுக்குழு தான் என் கடைசி அரசியல் யுத்தம். பாமக பொதுக்குழுவுக்காக ராமதாஸ் வெளியிட்ட உருக்கமான வீடியோ.

சேலம். டிச. 29–

சேலத்தில் பாமக பொதுக்குழு இன்று டிசம்பர் 29ந் தேதி நடைபெறும் நிலையில் அக்கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவரான டாக்டர் ராமதாஸ், உருக்கமான வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.



அந்த வீடியோ பதிவில்

என் கடைசி யுத்தமாக இருக்கலாம். சேலம் பொதுக்குழுவில் உண்மையான பாமகவோடு இணைந்து நிற்க வேண்டும். கடைசி மூச்சு இருக்கும் வரை பாமகவுக்காக, மக்களுக்காக இருப்பேன். இழந்த அங்கீகாரம், கட்சி சின்னத்தை மீட்கும் முதல் படி சேலம் பொதுக்குழு சட்டமன்றத் தேர்தலில் 25 எம்.எல்.ஏக்களை பெற்று ஆட்சியில் பங்கேற்க வண்டும்.

பாமக தேர்தல்ல தோற்ற பிறகும் ராஜ்யசபா எம்.பி. ஆக்குனோம். ஆனால், பொறுப்பு இருந்துச்சா? நாடாளுமன்ற வருகைப்பதிவு வெறும் 30%தான் இருந்தது. 20 எம்.எல்.ஏக்களை வைத்திருந்த பாமகஇன்று அங்கீகாரத்தையே இழந்துவிட்டது.

நாம் நடத்தும் போர் பதவிக்கானது அல்ல; இயக்கத்தின் ஆன்மாவை காப்பாற்றுவதற்கானது;அன்புமணி பக்கம் இருப்பவர்களும் பொதுக்குழுவுக்கு வர வேண்டும்.

## திருத்தணி அடுத்த ஆர்.வி. என் கண்டிகையில் வீட்டு வரி ரசீது வழங்குவதில் முறைகேடு

# ஊராட்சி செயலாளரை பணியிட நீக்கம் செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் சந்திரன்



திருவள்ளூர் டிச 29 :

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அடுத்த ஆர்.வி. என்.கண்டிகை கிராமத்தில் ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருபவர் வெங்கடேசன். இவர் சுமார் 50க்கும் மேற்பட்டோரிடம் பணம் வாங்கிக் கொண்டு வீட்டு வரி ரசீது வழங்காமல் அலைக்கழித்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் சந்திரன் கிராமத்திற்கு சென்ற பொழுது பொதுமக்கள் ஊராட்சி செயலாளரின் மீது புகார் அளித்தனர். பின்னர் உடனடியாக ஊராட்சி செயலாளர் வெங்கடேசன் அழைத்து நேரில் சென்று விசாரித்த போது வெங்கடேசன் முறையாக பதில் அளிக்காமல் வெங்கடேசன் மழுப்பலாக பதில் அளித்துள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்கள் மத்தியில் அருகில் இருந்த டேபிளை கோபத்தின் உச்சிக்கே சென்ற எம்எல்ஏ அதை வேகமாக தட்டி, கேட்ட கேள்விக்கு சரியான பதில் அளிக்க வேண்டும் என்று அவரை திட்டினார். பின்னர் உடனடியாக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தொடர்பு கொண்டு உடனடியாக ஊராட்சி செயலாளர் வெங்கடேசன் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது.



ஏற்காட்டில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாநில பழங்குடியினர் அமைப்பு சார்பாக செயற்குழு கூட்டம் நடைபெற்றது.... சேலம் மாவட்டம் ஏற்காட்டில் தனியார் தங்கும் விடுதியில் பாட்டாளி மக்கள் கட்சி மாநில பழங்குடியினர் அமைப்பு சார்பாக செயற்குழு கூட்டம் நேற்று சேலம் மாவட்ட செயலாளர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது. இந்த செயற்குழு கூட்டத்தில் பழங்குடியின மாநில தலைவர் ஸ்ரீகாந்த் வரவேற்புரை வழங்கினார். மேலும் பாமக மாநில ஒருங்கிணைப்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கார்த்தி சிறப்புரையாற்றினார்.. மேலும் இக்கூட்டத்தில் ஏற்காடு ஏரியில் கலக்கும் கழிவு நீரை தடுக்க வேண்டும் எனவும் மேலும் ஏற்காடு சுற்றுவட்டார பகுதியில் அமைந்துள்ள புளியம்பட்டி முண்ட சேடு போன்ற குக்கிராமங்கள் காணாமல் போய்விட்டது அதை மீட்டு தர வேண்டும் என போன்ற 10 இருக்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன மேலும் இக்கூட்டத்தில் பாமக மாநில துணைத்தலைவர் குணசேகரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தேவதாஸ் ஏற்காடு பழங்குடியினர் ஒன்றிய செயலாளர் கோவிந்தராஜ் தங்கராஜ் மற்றும் 50ற்கும் மேற்பட்ட பாமக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# ரயில் மோதி 50 ஆடுகள் பலி

தென்காசி மாவட்டம், செங்கோட்டையிலிருந்து ஈரோடு செல்லும் பாசஞ்சர் ரயில் இன்று காலை 5.30 மணி அளவில் தென்காசி ரயில்வே ஸ்டேஷனில் பயணிகளை ஏற்றிக் கொண்டு பாவூர்சத்திரத்திற்கு புறப்பட்டது. இடையில் சுமார் 200 மீட்டர் தூரம் சென்ற நிலையில் பாவூர்சத்திரம் கேடிசி நகருக்கு பின்புறம் மேம்பாலத்துக்கு செல்வதற்காக ரயில்வே தண்டவாளத்தை கடக்க முயன்ற 50 செம்மறிஆடுகள் மீது பயங்கரமாக மோதியது. இதில் 20 சினை ஆடுகள் உள்பட அனைத்து ஆடுகளும் ரத்த சகதியாகி சம்பவ இடத்திலேயே இறந்தன. இதுகுறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

# புதிய ஜல்லி சாலை திறப்பு விழா!




வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மத்திய ஒன்றியம் அப்புகல் ஊராட்சி கிராமத்தில் அப்புகல் முதல் சிவன் கோயில் வரை புதிய திறப்பு ஜல்லி சாலை திறப்பு விழாவில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்த வைத்தார் இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மத்திய ஒன்றிய செயலாளர் .வெங்கடேசன் ஒன்றிய குழு தலைவர் .பாஸ்கரன் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணமேனன் ஒன்றிய நிர்வாகிகள் .ராமச்சந்திரன் .செந்தில்குமார் .அஸ்லாம் பாஷா .சுரேஸ் ஊராட்சி மன்ற தலைவர் .காந்தி உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒன்றிய நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

# திருச்சி ,காந்தி மார்க்கெட் பகுதியில் போதை மாத்திரை விற்ற 3 பேர் கைது

திருச்சி, டிச.29:

திருச்சி , காந்தி மார்க்கெட் பகுதியில் போதை மாத்திரை விற்கப்படுவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் நேற்று போலீசார் சோதனை மேற்கொண்டனர். அப்போது சந்தேகிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த மூன்று வாலிபரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அப்போது செந்தனீர்புரம் அருகே போதை மாத்திரை விற்ற இதே போன்று அரியமங்கலம் காமராஜ் நகர் முகமதுஅலி தெருவை சேர்ந்த நஸ்ருதீன் (வயது24), அதே பகுதியை சேர்ந்த அசார்முகமது (வயது26) மற்றும் அரியமங்கலம் மேல அம்பிகாபுரம் அண்ணா நகரை சேர்ந்த உத்மான்அலி ( வயது23 )ஆகியோரை போலீசார் கைது செய்தனர். மேலும் அவர்களிடமிருந்த 110 போதை மாத்திரைகள் ,ஊசிகளை பறிமுதல் செய்தனர்.

# திருச்சியில் வாலிபருக்கு அரிவாள் வெட்டு

திருச்சி, டிச. 29:

திருச்சி, எடத்தெரு பிள்ளை மாநகர் பகுதியை சேர்ந்தவர் மரிய பிரதீஸ் குமார் (வயது43).

மற்றும் வரகனேரி பென்சனர் தெருவை சேர்ந்த பாபு (வயது30 ),காந்தி மார்க்கெட் கல்பாளையம் பகுதியை சேர்ந்த சாம்ராஜ் (வயது22) ஆகியோர் கடந்த25 ந்தேதி காந்தி மார்க்கெட் எடத்தெரு சாலை அருகே குடிபோதையில் இருந்தனர். அப்போது, அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது . மறுநாள் பாபு, சாம்ராஜ் இருவரும் வரகனேரி, பிரான்சிஸ் படிப்பகம் அருகே நின்று கொண்டிருந்தபோது, பிரதீஸ் குமார் அவர்களிடம் வந்து, கேள்வி கேட்டு விட்டு சென்றுள்ளார்.இந்நிலையில் பாபு மற்றும் சாம்ராஜ் இருவரும் பிரதீஷ் குமாரை மோசமான வார்த்தைகளில் திட்டி, அரிவா லால் வெட்டினர். இதில், பிரதீஷ் குமாரின் தலையின் வலது பக்கத்தில் வெட்டு காயம் ஏற்பட்டு, சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

இது குறித்த புகாரின் பேரில் காந்தி மார்க்கெட் போலீசார் வழக்கு பதிந்து பாபு மற்றும் சாம்ராஜ் ஆகியோரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "முஸ்லிம்களுக்கு 16 தொகுதி வேண்டும்"
## திமுகவிடம் கேட்கிறது முஸ்லிம் லீக்

தென்காசி,டிச. 29–

"தமிழகத்தில் முஸ்லிம்கள் 7% உள்ளதால் திமுககூட்டணியில் முஸ்லிம்களுக்கு 16 தொகுதிகள் ஒதுக்க வேண்டும்" என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் பொதுச்செயலாளர் முகம்மது அபூபக்கர் தெரிவித்தார்.



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயுஎம்எல்) கட்சியின் விவசாய அணி மாநில பொதுக்குழு கூட்டம் தென்காசியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக்கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் மாநில பொதுச் செயலாளர் முஹம்மது அபூபக்கர் கூறியதாவது:

தமிழகத்தில் மதச்சார்பற்ற கூட்டணி பலமான, ஒற்றுமையான, கொள்கைரீதியான கூட்டணியாக உள்ளது. அதிமுக பாஜக கூட்டணி, கொள்கை இல்லாத கூட்டணியாக உள்ளது. கொள்கை வேறு, கூட்டணி வேறு என்று பழனிசாமியே கூறி வருகிறார். கொள்கை இல்லாத கூட்டணியில் இருந்துகொண்டு திமுகவை பற்றி விமர்சிப்பதற்கு அவருக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை.

நடிகர் விஜய் தவறான தகவல்களை கூறி வருகிறார். அவரது பேச்சுகளில் எந்தவித முதிர்ச்சியும் இல்லை. தீய சக்தி என்ற அவருடைய சொல்லாடல் அனைத்துக் கட்சிகளாலும் விமர்சிக்கப் படுகிறது. திமுகவை மட்டுமே விமர்சிக்கும் விஜய் நாட்டுக்கும், சிறுபான்மை சமூகத்துக்கும் பல்வேறு தீமைகளை செய்து, தமிழகத்தை வஞ்சிக்கும் பாஜகவை பற்றி பேசுவதில்லை; அதிமுகவைப் பற்றி பேசுவதில்லை.

மூன்றாவது அணி, நான்காவது அணி மூலம் மதச்சார்பற்ற சக்திகளை நிலைகுலையச் செய்யலாம் என கனவு காண்கிறார்கள். ஓட்டைப் பிரிக்கும் எந்த அணிக்கும் சிறுபான்மை சமுதாய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தமிழகத்தை நேசிக்கக் கூடியவர்கள் யாரும் வாக்களிக்க மாட்டார்கள். திமுக கூட்டணி சட்டப் பேரவைத் தேர்தலில் சிறப்பான வெற்றி பெற்று, மீண்டும் ஸ்டாலின் தமிழக முதல்வராகி ஆட்சி அமைப்பார்.

தமிழகத்தில் முஸ்லிம்கள் 7 சதவீதம் உள்ளனர். அந்த அடிப்படையில் திமுக கூட்டணியில் முஸ்லிம்களுக்கு 16 தொகுதிகள் ஒதுக்க வேண்டும். அதில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 5 தொகுதிகள் வழங்க வேண்டும். கடையநல்லூர் தொகுதியை மீண்டும் கேட்டுப்பெற உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருவரங்கத்தில் கத்தியால் வாலிப ர்ரை தாக்கியவர் கைது

திருச்சி,டிச.29

திருச்சி திருவானைக்காவல் கொண்டையம்பேட்டை பகுதியை சேர்ந்தவர் சுஜேந்திரன் ( வயது39). இவர் கடந்த 25ஆம் தேதி இவரும் இவரது சகோதரரும் அப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர்.அப்போது அருணகிரி என்ற மனவளர்ச்சி குன்றிய நபரை அப்பகுதியை சேர்ந்த இருவர்

மதுபோதையில் தாக்கினார். இது குறித்து சுஜிந்திரன்மற்றும் அவரது சகோதரர் அதனை தட்டி கேட்டனர்.

இதனால் கோபமடைந்த இருவரும் சுஜேந்திரனை மோசமான வார்த்தைகளில் திட்டி, கத்தியால் தாக்கினார். இதில் முதுகு, கழுத்துக்குக் கீழே காயங்கள் ஏற்பட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.இது குறித்த புகாரின் பேரில் திரவரங்கம் போலீசார் வழக்கு பதிந்துசோமரசம்பேட்டை

அர்ஜூனா தெருவை சேர்ந்த பதன்ராஜ் (வயது19 )கைது செய்தனர். மேலும் திருவானைக்காவல் கொண்டையம்பேட்டை கரிகாலன் தெருவை சேர்ந்த விக்னேஸ்வரன் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எல்லைதாண்டி மீன் பிடித்ததாக தமிழக மீனவர்கள் 3 பேர் கைது",

ராமேசுவரம்: டிச.29–

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம், மண்டபம், பாம்பன், தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் ஒவ்வொரு முறையும் கடலுக்கு செல்லும்போது எல்லைதாண்டி வந்ததாக கூறி இலங்கை கடற்படை, அவர்களை கைது செய்து படகுகளை பறிமுதல் செய்வதும், பலமுறை தாக்கி விரட்டியடிப்பதும் தொடர்ந்து நடந்து வருகிறது.கடந்த ஒரு மாதமாக வடகிழக்கு பருவமழை, டிட்வா புயல் காரணமாக ராமேசுவரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.தற்போது இயல்பு நிலை திரும்பி உள்ள நிலையில், மீனவர்கள் கடலுக்கு சென்று வருகிறார்கள். இந்த நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வடக்கு மீன்பிடி துறைமுகத்திலிருந்து நேற்று காலை 300க்கும் மேற்பட்ட விசை படகுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கட லுக்கு மீன்பிடிக்க சென்றனர்.நெடுந்தீவு அருகே அவர்கள் மீன் பிடித்து கொண்டிருந்தபோது, அங்கு ரோந்து கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர், எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி ஜோசப் என்பவருக்கு சொந்தமான ஒரு படகையும், அதிலிருந்த மூன்று மீனவர்களையும் கைது செய்தனர். இதையடுத்து கைது செய்த தங்கச்சிமடம் எம்.ஜி.ஆர். நகரை சேர்ந்த அருளானந்தன் மகன் ஆமோஸ்டின் (24), அந்தோணியார்புரத்தை சேர்ந்த சத்யம் மகன் ஜோன்தாஸ் (37), மண்டபம் தோப்புகாடு அன்ரோஸ் மகன் பரலோக ஜெபஸ்டின் அன்ரோஸ் (25) ஆகியோரை இலங்கை கடற்படையினர் காரைநகர் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்றுள்ளனர்.அங்கு அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் மீனவர்கள் மூன்று பேரையும், படகுடன் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் ஒப்படைக்க இருப்பதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர். கடந்த 4 நாட்களுக்கு முன்புதான் இலங்கை கடற்படையினர் ராமேசுவரம் மீனவர்கள் 12 பேரை சிறைபிடித்து சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.",

# வந்தவாசியில் கருணாநிதி சிலை: முதல்வர் திறந்து வைத்தார்



வந்தவாசி , டிச 29

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பிராமணர் தெரு பகுதியில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் வெண்கல சிலை திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, சிலையை திறந்து வைத்தார். மேலும் 62 அடி உயரமுள்ள கொடிக் கம்பத்தில் திமுக கொடியை ஏற்றினார். இந்த நிகழ்வில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆரணி எம்பி எம்.எஸ்.தரணிவேந்தன், திருவண்ணாமலை எம்பி அண்ணாதுரை, எ.வ.வே.கம்பன், வந்தவாசி எம்எல்ஏ எஸ்.அம்பேத்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஆர்.சீதாபதி, நகரச் செயலாளர் தயாளன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கார்த்தி, நகராட்சி தலைவர் ஜலால், துணைத் தலைவர் அன்னை சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் ராதா, இளங்கோவன், பழனி, சுந்தரேசன், பெருமாள் மற்றும் திமுக நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் ஒன்றிய, நகர, நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி முடிந்து சிறிது தூரம் நடந்து சென்ற முதல்வர் மாணவிகள் மற்றும் பொது மக்களுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டார்.

# 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி: முதல் அமைச்சர் அறிவிப்பிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

சென்னை, டிச.29–

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது; "தமிழ்நாட்டில் 20 லட்சம் கல்லூரி மாணவர்



களுக்கு மடிகணினி வழங்கப்படும் என தமிழ்நாடு முதல்அமைச்சர் அறிவித்துள்ளது வரவேற்பிற் குரியது. தமிழ் நாட்டில் பள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இது மாணவர்களின் கற்றல் திறனை மேம் படுத்துகிறது. அவர்களின் கணினி பயன்பாட்டுத் திறனையும், படைப்பாக்கத் திறனையும் மேம்படுத்துகிறது. ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த அரசுப்பள்ளி மாணவர்களின கல்வி வளர்ச்சிக்கு மடிக்கணினி பெரிதும் உதவியாக உள்ளது.இத்திட்டத்தின் அடிப்படையில் தற்பொழுது 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச மடிக்கணினி வழங்கப்படும் என தமிழ்நாடு முதல்அமைச்சர் அறிவித்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. இந்த மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி விமர்சித்திருப்பது கண்டனத்திற்குரியது. இது அவரின் மாணவர் விரோத மனநிலையையே காட்டுகிறது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# எடப்பாடி ஊரிலேயே ஓட்டை போட்ட தவெக. சேலம் முன்னாள் எம்எல்ஏவை தூக்கிய செங்கோட்டையன்.

## தவெகவுக்கு அடுத்தடுத்து வரும் அதிமுக முக்கிய தலைவர்கள்.



சேலம். டிச. 29–

விஜய் சொன்னது நடக்குது,ஆட்டத்தை தொடங்கிய செங்கோட்டையன் அமைதி காக்கும் இபிஎஸ்.

தவெக(தமிழக வெற்றிக் கழகம்) நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் முன்னிலையில்,சேலம் அதிமுக முன்னாள் எம்.எல்ஏபல்பாக்கிகிருஷ்ணன் நேற்று தவெகவில் இணைந்தார். இதையடுத்து,அவரை அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கி, கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அதிமுக தலைமையகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், கழகத்தின் கொள்கை, குறிக்கோள் மற்றும் கோட்பாடுகளுக்குமுரணாக செயல்பட்ட தாலும், கழகத்தின் சட்ட திட்டங்களை மீறி ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்துகொண்டதாலும், மேலும் கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி செயல்பட்ட காரணத்தினாலும், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பில் மேலும், சேலம்புறநகர்மாவட்டத்தைச் சேர்ந்த பல்பாக்கி சி. கிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ., (சேலம் புறநகர் மாவட்டஎம்ஜிஆர்.மன்றச் செயலாளர்)இன்று முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்பு களிலிருந்தும் நீக்கப்படுவதாக குறிப்பிடப்பட் டுள்ளது. மேலும், அதிமுக உடன்பிறப்புகள் யாரும் அவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# 2ம் ஆண்டு நினைவு தினம்: விஜயகாந்த் நினைவிடத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் அஞ்சலி",



சென்னை, டிச. 29–

நடிகரும், தேமுதிக தலைவருமான விஜயகாந்த் கடந்த 2023 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். அவரது மறைவு திரைத்துறையினர், அரசியல் தலைவர்கள் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. விஜயகாந்த் உடல் கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. விஜயகாந்த் நினைவு தினத்தை குருபூஜையாக தேமுதிக கடைபிடித்து வருகிறது. இதில் பங்கேற்க முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மறைந்த நடிகரும், தேமுதிக தலைவருமான விஜயகாந்தின் 2ம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப் பட்டது. இதனை யொட்டி சென்னை கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்தின் நினைவிடத்தில் காலை முதலே தேமுதிக தொண்டர்களும், ரசிகர்களும் நீண்ட வரிசையில் காத்திருந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.அதைபோல பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் விஜயகாந்த் நினைவிடத்தில் மரியாதை செலுத்தி வருகின்றனர். பாஜக மூத்த தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் விஜயகாந்த் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். தொடர்ந்து தமாகா தலைவர் ஜி.கே.வாசன் விஜயகாந்த் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.2ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி விஜயகாந்த் நினைவிடத்தில் மத்திய இணை மந்திரி எல்.முருகன், பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், கருநாகராஜன், நடிகை கஸ்தூரி உள்ளிட்டோர் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.இதை போல திரைபிரபலங்களும், திரைப்பட இயக்குநர்களும் விஜயகாந்த் நினைவிடத்தில் மரியாதை செலுத்தி வருகின்றனர். விஜயகாந்த் நினைவிடத்தில், தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் அஞ்சலி செலுத்தினார். விஜயகாந்த் நினைவிடத்தில் நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மலர்தூவி மரியாதை செலுத்தினார். விஜயகாந்தின் 2ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது நினைவிடத்தில் திமுக சார்பில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். அப்போது அவருடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிர மணியன் உடனிருந்தனர். விஜயகாந்த் நினைவிடத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். குருபூஜையில் கலந்துகொள்ள தேமுதிக சார்பில் அதிமுகவுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டார். ",

# புதிய உடற்பயிற்சி கூடம் திறப்பு விழா.




வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மத்திய ஒன்றியம் அப்புகல் ஊராட்சி கிராமத்தில் புதிய உடற்பயிற்சி கூடம் திறப்பு விழாவில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்த வைத்தார் இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன் ஒன்றிய குழு தலைவர் .பாஸ்கரன் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணமேனன் ஒன்றிய நிர்வாகிகள் .ராமச்சந்திரன் .செந்தில்குமார் .அஸ்ஸாம் பாஷா .சுரேஸ் ஊராட்சி மன்ற தலைவர் . காந்தி உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒன்றிய நிர்வாகிகள் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

# திருத்தணி முருகன் கோயிலில் பக்தர்கள் உண்டியல் காணிக்கையாக ரூ.2.09 கோடி மற்றும் 794 கிராம் தங்கம் செலுத்தியதாக கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்



திருவள்ளூர் டிச 29

திருத்தணி முருகன் கோயிலில் கடந்த 45 நாட்களில் பக்தர்கள் உண்டியல்களில் ரூ. 2.09 கோடி காணிக்கையாக செலுத்தியதாக திருக்கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவித்தனர். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் படை வீடாக சிறந்து விளங்கும் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி முருகன் கோயிலுக்கு தினமும் திருவள்ளூர் சென்னை காஞ்சிபுரம் திருவண்ணாமலை வேலூர் ராணிப்பேட்டை போன்ற பல் வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆந்திரா கர்நாடகா பாண்டிச்சேரி போன்ற பிற மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

அந்த வகையில் உண்டியல்களில் நகை. பணம், பொருட்களை காணிக்கையாக செலுத்துவது வழக்கம். கடந்த 45 நாட்களில் பக்தர்கள் செலுத்திய உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நடைபெற்றது. இணை ஆணையர் ரமணி, அறங்காவலர் சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலையில் உண்டியல்கள் திறக்கப்பட்டு வசந்த மண்டபத்தில் காணிக்கை எண்ணும் பணி நடைபெற்றது.

இதில் கோயில் ஊழியர்கள் மற்றும் தற்காலிக ஊழியர்கள் இணைந்து 100க்கும் மேற்பட்டோர் காணிக்கை எண்ணும் பணியில் ஈடுபட்டனர். இதில், உண்டியல் காணிக்கையாக ரூ. 2 கோடி 5 லட்சத்து 80 ஆயிரத்து 775 ரூபாய் ரொக்கமும், திருப்பணி காணிக்கையாக ரூ. 3 லட்சத்து 70 ஆயிரம் 474 ரூபாய் ஆக மொத்தம் ரூ.2 கோடி 9 லட்சத்து 51 ஆயிரத்து 249 ரூபாய் ரொக்கம், 794 கிராம் தங்கம், 15.128 கிராம் வெள்ளி பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியதாக திருக்கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவித்தனர்.

# விஜய்யின் அரசியல் பயணத்திற்கு இலங்கை முன்னாள் அதிபர் மகன் வாழ்த்து!",

சென்னை. டிச. 29–

"தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யின் அரசியல் பயணம் வெற்றிக்கரமாக அமைய இலங்கையின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சேவின் மகன் நமல் ராஜபக்சே வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், \"எனக்கு பிடித்த நடிகர்களில் ஒருவர் தளபதி விஜய். அவரது சினிமாப்பயணம் மற்றும் திரையில் அவர் வெளிப்படுத்திய ஆற்றல் சிறப்பானவை, மறக்கமுடியாதவை.

அவர் இந்தக் அத்தியாயத்தை முடித்துக்கொண்டு ஒரு புதிய பயணத்தில் அடியெடுத்து வைக்கும் வேளையில், சினிமா உலகம் நிச்சயமாக அவரது இருப்பையும், துடிப்பையும் மிஸ் செய்யும். வரவிருக்கும் அனைத்திலும் அவருக்கு வெற்றியும், நல்வாழ்த்துக்களும் மட்டுமே கிடைக்க வாழ்த்துகிறேன்.\" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மணப்பாறை அருகே முன்னாள் சென்ற வாகனம் மீது இருசக்கர வாகனம் மோதி விபத்து.

## இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு.

மதுரை மாவட்டம், மேலூரைச் சேர்ந்தவர்கள் கறிக்கடையில் வேலைபார்க்கும் காதர் மைதீன் (23), அவரது நண்பர் கல்லூரி மாணவர் அப்சர் (20) இருவரும் இருசக்கர வாகனத்தில் திருச்சியில் இருந்து மதுரை நோக்கி நேற்று இரவு சென்று கொண்டிருந்தனர். திருச்சி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் மணப்பாறையை அடுத்த சொரியம்பட்டி மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த போது முன்னாள் சென்ற அடையாளம் தெரியாத வாகனத்தின் பின்புறம் மோதியது. இதில் இருசக்கர வாகனத்தில் சென்ற இருவரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். சம்பவம் குறித்து வளநாடு போலீசார் சம்பவ வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருவண்ணாமலை ஆல் மீடியா பிரஸ் ஜெர்னலிஸ்ட் யூனியன் சார்பில் 300 சாதுக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது



வந்தவாசி, டிச: 29

திருவண்ணாமலையில் ஆல் மீடியா பிரஸ் ஜெர்னலிஸ்ட் யூனியன் மற்றும் சிவனடியார் சாதுக்கள் சேவா சங்கம் இணைந்து 300 சாதுக்களுக்கு அன்னதானமும், 60 சிறந்த பத்திரிகையாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழையும் சிவனடியார் சாதுக்கள் சேவா சங்க நிறுவனர் நாகராஜ் வழங்கினார். இவ்விழாவில் மாநில அமைப்பாளர் சுரேஷ், மாநில கௌரவத் தலைவர் ராஜ்குமார், மாநில அமைப்பாளர் ராம்சிவம், மாநில ஒருங்கிணைப்பாளர் என்.எஸ்.பூபதி, மாநில துணை செயலாளர் சுகுமார், மாநில செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சின்னமணி, மணிகண்டன், மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர் சுரேஷ்குமார், விழுப்புரம் மாவட்ட முன்னாள் மாவட்ட தலைவர் தங்கராஜ், மாவட்ட துணைத் தலைவர் பாரதி, மாவட்ட செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட துணை செயலாளர் ராஜேஷ், மாவட்ட துணை செயலாளர் லூர்து செல்வராஜ், மற்றும் ஏழுமலை பூபதி, திருவண்ணாமலை மாவட்ட தலைவர் எஸ்.செந்தில் மாவட்ட செயலாளர் எம் .எஸ் .சீனிவாசன் மாவட்ட பொருளாளர் ஜி.ராமதாஸ், மாவட்ட துணைத் தலைவர்கள் ஆறுமுகம், கல்பனா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன், வெங்கடேசன், முன்னாள் மாவட்ட செயலாளர் ஏ.எம். செந்தில் சங்க உறுப்பினர்கள் சுரேஷ், அரசலிங்கம், சி.வினோத்குமார், மாவட்ட மற்றும் சங்க உறுப்பினர்கள் கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மூன்று மாவட்ட பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421